(அமுதசுரபி பிப்ரவரி 2015)

# தமிழ் வழிக் கல்வி

## நடந்து வந்த பாதையும் செல்ல வேண்டிய பாதையும்

பேரா. ச. முத்துக்குமரன்

------------------------------------------------------------

சுதந்திரப் போராட்ட காலத்தில் நமது மொழி வழியில் கல்வி கற்க வேண்டும் என்ற குரல் ஓங்கியது. சுதந்திர போராட்டம் வலுப்பெற்று நம் மக்கள் ஆட்சியில் அமரும் நிலை வந்த போது 1937 ல் தமிழ் நாட்டில் பள்ளிகளில் தமிழ், கல்வி மொழி ஆகியது. அதன் விளைவாக 1943 லிருந்து பள்ளி இறுதி தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவர்களில் 100 க்கு 99 பேர் தமிழ் வழிப் பள்ளிக் கல்வி கற்றவர்களாக இருந்தனர்.

இவர்கள் கல்லூரியில் சேர்ந்தபோது ஆங்கில வழிக் கல்விக்கு மாறினர். இந்த மாற்றம் சிலருக்கு தடுமாற்றம் அளித்தது. ஆகவே கல்லூரியிலும் தமிழ் வழிக் கற்றல் வேண்டும் என்ற குரல் 1950 களில் மேலோங்கியது.

1956 ல் தமிழ் மாநிலம் தனியாக பிரிந்த (அதாவது நமது நாடு மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட) பின்னர் நமது மாநிலத்தில் தமிழ்வழி உயர் கல்வி கற்க நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அப்போது தமிழில் கலைச்சொற்கள் உருவாக்கவும், கல்லூரி நிலையில் பாடநூல்கள் எழுதவும் வேண்டும் என்பதை உணர்ந்து தமிழ் ஆர்வலர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டனர். அக்காலகட்டத்தில் வெளிவந்த சில நூல்கள் ஆங்கில நடையில் தமிழில் எழுதப்பட்டன. அவை நன்றாக இருக்கின்றன என்ற கருத்து சிலருக்கு இருந்தது. அவர்கள் இது அறிவியல் தமிழ் என்றனர். எப்படி சித்தர்கள் எழுதியவற்றை புரிந்து கொள்வது கடினமோ அவ்வாறே இவற்றைப் பலர் புரிந்து கொள்வது கடினமாக இருந்தது

அப்போது மொழிப்பெயர்ப்புக் கலையை வளர்ப்பது என்று தமிழ் ஆர்வலர்கள் முனைந்தனர். தமிழ் நடையிலேயே தமிழ் இலக்கணத்துக்கு உட்பட்டு தமிழில்

அறிவியல், தொழிநுட்ப நூல்கள் எழுதுவது பற்றி நூல்கள் எழுதப்பட்டன. பயிலரங்குகள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அதன் பின்னர் ஆங்கில நடையில் எழுதியவர்களும் தமிழ் நடையில் எழுதுவது மேலானது என்பதை உணர்ந்து நல்ல தமிழ் நடையில் எழுதினர்.

தமிழில் அறிவியல், தொழிநுட்பக் கட்டுரைகள், நூல்கள் ஓரளவு பெருகிய பின்னர் எழுபதுகளின் பிற்பகுதியில் தொடங்கி பல ஆராய்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்டன. அவற்றில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டு தாங்கள் செய்த ஆராய்ச்சிகளைக் குறித்து தமிழில் கட்டுரைகள் எழுதி வாசித்தனர். தமிழில் விவாதித்தனர்.

அக்காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் தமிழில் ஆயிரம் பக்கங்களுக்கு மேல் ஆராய்ச்சி கட்டுரைகள் வெளிவந்தன. சிலர் முனைவர் பட்டத்துக்கான ஆய்வு ஏடுகளையும் தமிழில் எழுத முன்வந்தனர். அதற்கும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் அனுமதி அளித்தது.

அறிவியலும் தொழில்நுட்பமும் விரைந்து வளருகிற் நிலையில் புதிய ஆராய்ச்சி முடிவுகளை, நமது ஆராய்ச்சியாளர்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள வழி வேண்டும் என்பதற்காக பல துறைகளில் ஆங்கிலத்தில் வெளி வரும் சில இதழ்களில் வெளியான கட்டுரைகளின் சுருக்கம் உடனடியாக தமிழில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது.

இவ்வாறு எல்லா நிலைகளிலும் தமிழ் வழிக் கற்கவும் ஆய்வுக் கட்டுரை வெளியிடவும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால் அதே காலகட்டத்தில் நாளொரு மேனியும் பொழுது வண்ணமுமாக ஆங்கில வழிக் கல்வி பள்ளி நிலையில் வளர்ந்தது! இதற்குக் காரணம் வணிக நோக்கோடு சிலர் ஆங்கில வழிக் கல்வியை வளர்க்கிறார்கள் என்று நாமும் தனியார் பள்ளி நிர்வாகத்தினரை வசை பாடினோம். எப்போது வணிக நோக்கோடு செயல்பட்டு வெற்றி பெற முடியும்? என்பதை நாம் சிந்திக்கவில்லை. ஒரு பொருளை மக்கள் விரும்பினால்தான் அதை வணிகமாக்க முடியும். அதை நாம் கண்டு பிடித்த உடன் ஆட்சியாளர்கள் மக்கள்

விரும்புகிறார்கள்; ஆகவே அரசும் ஆங்கில வழிக் கல்வியை வளர்க்கிறது என்கிறார்கள்!

இந்நிலை நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. **தமிழ் வழியில் கற்பதற்கு இருந்த அத்துணைத் தடைகளையும் உடைத்த பிறகும் மக்கள் ஏன் ஆங்கில வழிக் கல்வியையே வேண்டுகிறார்கள்? ஆங்கிலத்தின் மேல் காதலா? அது உயர்ந்த மொழியா? இல்லையே! பின் என்ன?**

இக்கேள்விக்கு பதிலை நாம் ஆங்கிலம் எவ்வாறு பரப்பப்பட்டது என்பதை ஆராய்ந்தால் தெரிய வரும். ஆங்கிலேயர்கள் தமது அண்டை நாடுகளான வேல்ஸ், ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து, ஆகியவற்றில் எல்லாம் அம் மக்களுக்கு நல்லது செய்வது போல முதலில் ஆட்சியைக் கைப்பற்றி, ஆங்கிலத்தை அரசு அலுவலகங்களிலும், நீதிமன்றங்களிலும் புகுத்தினர். இலத்தீன் மொழியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற போர்வையில் வழிபாட்டில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தினர். பின்னர் ஆங்கிலத்தை மேல்தட்டு மக்களின் குழந்தைகளுக்குக் கற்பித்தனர். அவர்களை ஆட்சியில் பங்கு கொள்ளச் செய்தனர். அந்த நிலையில் பொது வாழ்க்கையில் ஈடுபடவும், ஆங்கிலம் தேவை என்ற நிலை உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் நடுத்தர மக்களும் அடிமட்ட வகுப்பினரும் தாங்களும் ஆட்சியில் பங்கு பெறவும், பொது வாழ்கையில் ஈடுபடவும், தாமாகவே ஆங்கிலம் கற்கத் தொடங்கினர்! இதே முறையைத்தான் அவர்கள் சென்ற நாடுகளில் எல்லாம் பயன்படுத்தினர். ஆங்கில வழிக் கல்வி வளர்ந்தது.

நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் ஏன் ஆங்கில வழிக் கல்வி வளர்கிறது? புற்றுநோய் போலப் பரவுகிறதே! அதாவது அது மற்ற கல்வியை அழித்து வளர்கிறதே! அதற்குக் காரணம் என்ன? உடனடியாகத் தெரியும் காரணங்கள் இரண்டு.

ஆங்கிலேயர்கள் வெளியேறும் போது தங்கள் கல்வி முறையில் கல்வி கற்றவர்களிடமே ஆட்சியை விட்டுச் சென்றனர். இருப்பதைத் தொடர்வது எளிது என்பதால் புதிய ஆட்சியாளர்கள் அந்த வழியிலேயே நடந்தனர்; நடக்கின்றனர்.

மேலும் அனைவருக்கும் ஆட்சியில், பொது வாழ்க்கையில் ஈடுபட வாய்ப்பு வேண்டும் என்ற போர்வையில் ஆங்கிலேயரின் கல்வி முறை பரவலாக்கப்பட்டது. வேறு முறைகள் இல்லையா? என்பதைச சிந்திக்க பல ஆட்சியாளர்களுக்கு நேரமில்லை. சிலருக்கு வேறு முறை தெரிந்தாலும் அதைச் செயல்படுத்த அச்சம்.

இவர்கள் ஒரு வகையில் கிணற்றுத் தவளைகள் போல் செயல்படுபவர்கள். கிணற்றில் தவறி விழுந்த தவளை சிறிது நேரம் வெளியே வர முயன்று விட்டு பிறகு கிணற்றிலேயே உணவைத் தேடி உண்டு வாழத் தொடங்கும். சில காலம் கழித்து அதை வெளியில் கொண்டு வந்து விட்டாலும் அது வெளி உலகைக் கண்டு அஞ்சி திரும்ப கிணற்றில் குதித்து விடும்! அதே போல இவர்களும் வேறு வழிகள் தெரிந்தாலும் அவ்வழிகளில் செல்ல அஞ்சுகின்றனர்.

இரண்டாவதாக ஆங்கில வழிக் கல்வி ஒரு வகையில் சிலருக்கு சாதகமாக அமைந்திருக்கிறது. திறமையனாவர்களில் பலருக்கு ஆங்கில மொழி கற்க இயலவில்லை. அவர்களுக்கு மற்ற திறமைகள் இருப்பினும் மொழித்திறன் இல்லை என்பதால் அரசு மேற்பதவிகள், நீதி மன்ற உயர் பதவிகள் பொது வாழ்கையில் உயர்வு, இவை எவற்றையும் அவர்களால் பெற முடியவில்லை. அவர்களை ஒதுக்கி வைத்து வேறு சிலரே பதவிகளில் தொடர்வதற்கு ஆங்கிலம் ஒரு கருவியாக இருக்கிறது.

மேலும், **பெரும்பாலானவர்கள் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளும் நிலை வராது என்பதால் ஆங்கிலத்தில் பேசி மக்களை ஏமாற்றுவது எளிது.** எடுத்துக்காட்டுக்கு நமது நிதி அமைச்சர் இந்த ஆண்டு disinvestment வழியாக இத்தனை ஆயிரம் கோடி ரூபாய் திரட்டுகிறோம் என்கிறார். மக்கள் நம் நிதி அமைச்சர் ஆங்கிலத்தைப் படித்து அறிவு பெற்றதனால் ஏதோ ஒரு புது அல்லது மாற்று முதலீட்டு மூலம் பணம் திரட்டுகிறார் என்று நம்புகின்றனர். ஆனால், அவர் முந்திய அரசு சேர்த்து வைத்த சொத்தை விற்கிறார். வேறு மாற்று முதலீடு எதுவும் ஏற்பாடு செய்ய வில்லை. அரசு சொத்தை விற்று அரசு செலவு செய்கிறது என்பதை

அறிந்தால், மக்கள் கண்டிப்பாக எதிர்ப்பார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆகவேதான் அவர் ஆங்கிலத்தில் disinvestment என்கிறார்.

இதே முறையைத்தான் ஆங்கிலேயர்கள் பின்பற்றி ஆட்சியைக் கைப்பற்றினர். நல்லது செய்வது போல தங்கள் மொழியை, கல்வியை மக்கள் செலவில் பரப்பினர். ஆட்சியில் தொடர்ந்தனர். அவர்கள் வழியிலேயே இன்றும் நாம் செல்வதால் ஒரு சிலர் மட்டுமே ஆட்சியிலும், பொதுவாழ்க்கையிலும் செல்வாக்கு பெற ஆங்கில வழிக் கல்வி உதவுகிறது.

ஆங்கில வழிக் கல்வி தொடர்வதற்கு இங்கு சொல்லப்பட்ட இரு காரணங்களே முக்கியமானவை. ஒரு சிலர் தாங்களும், தங்களைச் சார்ந்தோருமே பதவிகளில் தொடர்வதற்கு ஆங்கிலம் ஒரு கருவியாக இருக்கிறது என்பதால், இன்று பயன்பெறுகிறவர்கள் ஆங்கிலத்தைத் தொடரச் செய்கின்றனர்.

நம் தமிழ் நாட்டைப் பொருத்தவரையில் ஆந்திரர்கள், மராத்தியர்கள், முஸ்லீம்கள், ஆங்கிலேயர்கள் ஆண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆட்சியில், முறையே தத்தம் மொழியான தெலுங்கு, மராத்தி, பாரசீகம், ஆங்கிலம் ஆகியவற்றை ஆட்சி மொழியாகக் கொண்டனர். ஆனால், மக்களுடன் மக்கள் மொழியிலேயே தொடர்பு கொண்டனர். இதற்கு எதிராக நாம் சுதந்திரம் பெற்ற பின்னர்தான், நம் கூட்டாட்சி அரசு, ஆட்சி மொழியில்தான் நம்முடன் தொடர்பு கொள்வோம் என்கிறது.

எடுத்துக்காட்டுக்கு **நாம் நம் தமிழ் நாட்டுக்கு உள்ளேயே சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு செல்ல தொடர்வண்டியில் பயணச்சீட்டு வாங்கினால் அது ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கிறது! நமக்கு ஒதுக்கப்பட்ட இடம் எது என்று அறிய வண்டியில் ஓட்டப்பட்டிருக்கும் பட்டியலைப் பார்த்தால் அதுவும் ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கிறது! அதாவது, நம் மாநிலத்திலேயே ஓரிடத்தில் இருந்து வேறோரிடம் செல்ல நாம் ஆங்கிலமாவது அல்லது இந்தியாவது கற்க வேண்டும்!** இது மிகப் பெரிய அநியாயம் என்பதை நாம் உணர வேண்டும்.

இப்போதுதான் சமச்சீர் கல்வி கொண்டு வந்து விட்டோமே! அனைவரும் ஆங்கிலமும் ஆங்கில வழிக் கல்வியும் கற்று முன்னுக்கு வரலாமே! என்று எண்ணலாம். ஆனால் அது ஒரு மாயை. **நம் மாநில மொழியை விட்டு வேறு ஒரு மொழியைக் கற்று அறிவு பெறுவது நம் நேரத்தையும் பொருளையும் வீணடிப்பதாகும். அது நம் சந்ததியினர் தம் மொழியையும், பண்பாட்டையும் இழக்கச் செய்யும்.** அதாவது நம் சந்ததியினர் அவர்களையே இழந்து விடுவார்கள். இது கண்ணை விற்று சித்திரம் வாங்கிய கதையாக முடியும் அல்லவா? இத்தகைய முடிவு நமக்கும், நம் சந்ததியினருக்கும் வரவேண்டுமா? சிந்தியுங்கள்.

ஆகவே நாம் உடனடியாக தமிழ் மாநில அரசைத் தமிழை முழுமையாக ஆட்சியில் பயன்படுத்த வற்புறுத்துவதுடன், மைய கூட்டாட்சி அரசையும், தமிழ் நாட்டில் தமிழை ஆட்சி மொழியாகப பயன்படுததச் செய்ய வேண்டும். மேலும், கூட்டாட்சி அரசு மாநில அரசுகளுடன் மாநில மொழியில் தொடர்பு கொள்ள வற்புறுத்த வேண்டும். தில்லியில் அமைந்த அரசு கூட்டாட்சி அரசே அன்றி மத்திய அரசு அல்ல என்பதை உணர்ந்தால், மக்களுடன் மட்டுமல்லாது மாநில அரசுகளுடனும் மாநில மொழியில்தான் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற கருத்தில் உள்ள நியாயம் விளங்கும்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு செயலகத்தில் ஒரு சில உயர் அலுவலர்களுக்கும், அவர்களது நேரடி உதவியாளர்களளுக்கும் மட்டுமே தொடர்பு மொழியில் பயிற்சி தேவை. மற்றவர்கள் மாநிலமொழியில் செயலாற்றுவதால், அவர்களுக்கு மாநில மொழி தவிர வேறு மொழி ஏதும் தெரியவேண்டியதில்லை. கூட்டாட்சி அரசு தனது திட்டங்களின் விவரங்களை மக்கள் மொழியில் தருவது அதன் கடமை. ஆகவே, அந்த அரசு அலுவலகத்தில் மாநில மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கக் கூடியவர்கள் தேவைப்படும் அளவுக்கு பணியாற்ற வேண்டும். அனைத்து பணியாளர்களும் தங்கள் மாநில மொழியில் நல்ல அறிவு பெற்று இருப்பார்கள். அவர்களில் யாருக்கு தொடர்பு மொழி தெரியாதோ அவர்களுக்கு மட்டுமே தொடர்பு மொழி பயிற்சி அளித்தால்

போதுமானாது. தேவைப்பட்டால் முன்றாவது மொழியைக் கூட்டாட்சி அரசு அலுவலர்களுக்கு கற்பிப்பது எளிது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் நாட்டில் பிறந்த அத்தனைக் குழந்தைகளும் இரண்டு மூன்று மொழி படிக்கவேண்டும் என்ற தேவையும் இருக்காது! மொழிகள் பல கற்பதில் குழந்தைகளின் நேரமும் வீணாகாது!

இந்தத் திட்டம் ஒன்றும் புதிதல்ல. 1998 ஆம் ஆண்டே, அப்போது இருந்த கூட்டாட்சி அரசு அனைத்து தேசிய மொழிகளும் கூட்டாட்சி அரசு அலுவலக மொழியாக ஆக்குவதாக வாக்குறுதி அளித்து, அதைச் செயல்படுத்த ஒரு குழுவையும் அமைத்தது. அக்குழுவின் அறிக்கை என்னவாயிற்று? அதாவது இத் திட்டம் செயல்படுத்த முடியாததல்ல. நாம்தான் அரசைச் செயல்படுத்த வற்புறுத்தவேண்டும்.

நம் கோரிக்கை நம் மொழி பயிற்றுமொழியாக வேண்டும் என்பதல்ல; நம் மாநிலத்தில் நம் மொழி முழுமையாக ஆட்சி மொழியாக வேண்டும். அதன் பயனாக நம் மொழி கல்வி மொழியாகவும், நீதி மன்ற மொழியாகவும், வழிபாட்டு மொழியாகவும் தானாகவே ஆகும் என்பது உறுதி. **நம் மொழியை முழுமையாக ஆட்சி மொழியாகச் செய்வது ஆட்சியளர்களின் கடமை; இது சுதந்திர நாட்டில் வாழும் எங்களது உரிமை என்று குரல் கொடுப்போம்.** நம்முடைய இந்த உரிமையைப் பெற நமக்கு இறைவன் துணை நிற்பானாக.